# இணைவகுப்புச்சூழலில் தமிழ்மொழி இலக்கணக் கற்றல் கற்பித்தலில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

# The Challengers of Teaching and Learning Tamil Languange Grammar in Multigrading Classes Environment

சந்துரு முத்தையா / Chandru Muthiah[1]

மனோன்மணி தேவி அண்ணாமலை / Manonmani Devi M.A.R Annamalai[2]

Date of submission: 2023-8-28
Date of acceptance: 2023-09-04
Date of Publication: 2023-12-28
Corresponding author's Name: Mr. Chandru Muthiah
Email: chandruchan@yahoo.com

**Abstract**

Tamil schools with multigrading classes schools are now springing up in Malaysia, especially in estate areas and not so much in urban areas. This creates a situation where students of different ages have to attend the same class. Teachers should also teach defined grammar skills at the same time. This study shows the challenges faced by teachers in time management and matching skills in Tamil grammar in 4th and 5th grade. This study was also conducted with 6 tamil language teachers in the Northern region. This is a qualitative study using semi-structured interview method. Research results show that even if teachers can only shell out 30 minutes on each lesson, students still depend on the teacher's explanations. Research also shows that mixed classes have different student levels and teachers don't give appropriate explanations for students with good and poor grammar. Teachers also reported that they were unable to perform the activities intended for grammar instruction. Looking at the skill mix, it was found that teachers encountered problems with sentence formation during the same period of instruction. Finally, research has also shown that teachers have difficulty associate Tamil words called 'punarchi'.

**Keywords:** Multigrading school, Grammar teaching and learning, Sentence structure skills, 'Punarchi' in grammar, Tamil Schools.

[1]The author is a postgraduate doctoral candidate in the Deparment of Modern Language, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Tanjong Malim, Malaysia. chandruchan@yahoo.com

[2]The author is an Associate Professor in the Deparment of Modern Language, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Tanjong Malim, Malaysia. manonmanidevi@fbk.upsi.edu.my

## முன்னுரை

அனைத்து மாணவர்களுக்கும் விருப்பு வெறுப்பின்றிக் கலைத்திட்டத்தில் உள்ள கல்வியை முழுமையாகச் சேர்ப்பது ஆசிரியர்களின் தலையாய கடமையாகும். இவ்வகையில் இணைவகுப்புத் தமிழ்ப்பள்ளிகள் மலேசியாவில் அதிகரித்து வரும் இத்தருணத்தில் ஒவ்வொரு இணைவகுப்புப் பள்ளி மாணவர்களும் ஒற்றைவகுப்பு மாணவர்கள் போலவே முழுமையான கல்வி பெற தகுதியுடையவர்கள் எனக் கருதுகின்றனர் (Fui & Wan Muna Ruzana, 2019). இணைவகுப்பு (Kelas Bercantum) என்கிற சொல் நமது நாட்டில் பொதுவான பயன்பாட்டிற்குக் குறிப்பிட்டிருந்தாலும், இத்தகைய பள்ளியினைப் பல்தர மாணவர் வகுப்பு என்றும் சில நாடுகளில் பெயரிட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பானது ஹிழிணிஷிசிளி *(2017)* இணைவகுப்பிற்கு மாறுப்பட்ட பிண்ணனியான தரம், வயது, ஆன்டு, பொருளாதாரம், கலாச்சாரம் மேலும் பால் கொண்ட மாணவர்கள் ஒரே வகுப்பில் அமர்ந்து கற்கும் சூழல் என்று பொருளுரைக்கின்றது. இன்னும், இணைவகுப்பு என்பதானது மலேசியாவில் மற்றுமின்றி ஏழை நாடுகள், வளர்ந்து வரும் நாடுகள், வளர்ந்த நாடுகளிலும் காணப்படுகிறது. அமெரிக்கா, கனடா, ஆசுதிரோலியா, கம்போடியா சீனா, இந்தோனிசியா, பிலிபைன்சு, வியட்நாம் போன்ற நாடுகளிலும் இணைவகுப்புகள் அமலாக்கத்தில் உள்ளன என்று தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது (UNESCO,2015).

இவ்வளவில், இலக்கணம் என்பதானது தொடக்கப் பள்ளி கற்றல் கற்பித்தலில் மிக முக்கியக் கூறாகும். இலக்கணமே ஒரு மொழியின் பிறப்பிற்குக் காரணமாக அமைகிறது. இலக்கண விதிகளே ஒரு மொழியினை வடிவமைத்துச் சீராக்குகிறது எனவும் அதுவே மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் காரணமாக அமைகிறது என Yap Leng Lee *(2021)* தமது ஆய்வில் குறித்துள்ளார். Annamala et.al *(2017)* இலக்கணம் என்பது ஒரு மொழியின் முதுகெலும்பாக இருந்து, அதுவே மொழிக்கு உயிர் கொடுக்கிறது என்கிறார். Awang Sariyana *(2002)* இலக்கணம் என்பது ஒரு மொழியின் வழிகாட்டி எனவும் வாக்கிய அமைப்புக்குத் தலைமை வகுத்து ஒரு கருத்தினை எளிதாகப் புரியச் செய்கிறது எனக் கருதியுள்ளார்.

## ஆய்வுப் பின்னணி

இணைவகுப்பு அதிகாரப்பூர்வமாக மலேசியா கல்வி அமைச்சு ஆண்டு 2017 சுற்றறிக்கை எண் 9 வழி அறிவித்தது. இதன் தொடர்பாக 2018ஆம் ஆண்டு 126 தமிழ்ப்பள்ளிகள் இணைவகுப்புகளாக மாற்றியமைக்கப்பட்டுக் கற்றல் கற்பித்தல் மேற்கொள்ளப்பட்டன. இணைவகுப்பானது 30க்கும் குறைவான மாணவர்கள் பள்ளியில் இருப்பின் அப்பள்ளிகள் 1ஆம் 6ஆம் ஆண்டு தனி வகுப்புகளாகச் செயல்படும் வகையில் 1உம்3 உம் ஒரே வகுப்பாகவும் 4உம் 5உம் ஒரே வகுப்பாகச் செயல்படும். இவ்வகையில் 11 ஆசிரியர்கள் எண்ணிக்கையைக் கொண்ட குறைந்த பள்ளியின் ஆசிரியர்களின் பகுப்பு முறை மாற்றப்பட்டு 3 ஆசிரியர்கள் எண்ணிக்கையைக் குறைத்து 8 ஆசிரியர்கள் மட்டுமே இணைவகுப்புப் பள்ளிகளில் பணியாற்ற வேண்டும் என்கிற கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

சுற்றறிக்கை எண் 9 மேலும், இணைவகுப்பினை வழிநடத்தும் முறையினை எடுத்துரைக்கும் வகையில் வழிகாட்டி ஆவணம் ஒன்றினை வெளியிட்டிருந்தது. இவ்வழிகாட்டி, ஆசிரியர்கள் இணைவகுப்பினை வழிநடத்தும் அணுகுமுறையினை விளக்கும் வகையில் அமைந்திருந்தது. இணைவகுப்பில் நேர நிர்வகிப்பு, கால அட்டவணை, பகுப்பு முறை, கற்றல் கற்பித்தல் அணுகுமுறை, குழு பகுப்பு முறை மேலும் பள்ளி நிருவகிக்கும் முறை உட்பட பல தகவல்களை விளக்கும் வகையில் இச்சுற்றறிக்கை விளங்கியிருந்தது. ஆசிரியர்கள் இணைவகுப்புகளில் கற்பிக்கும் திறனை மேலோங்கச் செய்ய மேலும், கல்வி அமைச்சு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர்களுக்கும் மாநிலக் கல்வி இலாகா அதிகாரிகளுக்கும் மாவட்ட கல்வி இலாகா சார்ந்த அதிகாரிகளுக்கும்

பட்டறைகளை வழிநடத்தியது. பட்டறையில் கலந்து கொண்ட அதிகாரிகள் இணைவகுப்பு பள்ளிகளுக்குச் சென்று ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக இருந்து கற்றல் கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொள்ளும் முறையினை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இணைவகுப்பின் அடுத்த சுற்றறிக்கை, 2022ஆம் ஆண்டு எண் 6ஆக மலேசியா கல்வி அமைச்சு வெளியிட்டது. இச்சுற்றறிக்கையின் வழி 2017 ஆண்டு 126 இணைவகுப்பாக இருந்த தமிழ்ப்பள்ளிகள் 2022 ஆண்டில் 135 பள்ளிகளாக ஏற்றம் கண்டு மலேசியாவில் காணப்படும் இணைவகுப்புப் பள்ளிகளில் 32% இருந்தது. தொடர்ந்து 2022ஆம் ஆண்டு மலேசியா கல்வி அமைச்சு ஆசிரியர்களுக்குத் துணை புரியும் வகையில், கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு துணையுடன் பாடத் திறன் ஒருங்கிணைப்பு ஆவணத்தை வெளியீடு செய்திருந்தது. இதன் அடிப்படையில் 2023ஆம் ஆண்டு இணைவகுப்பில் கற்றல் கற்பித்தல் மேற்கொள்ளும் ஆசிரியர்கள் இந்த ஆவணத்தை மேற்கோளாகக் கொண்டு தனது பாடத்திட்டத்தினை வடிவமைக்கவும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

கல்வி அமைச்சு தனது பாடத்திட்ட ஆவணத்தில் ஒவ்வொரு மாணவரும் இலக்கணத்தில் புலமை பெற்றிருக்க வேண்டும்; அவ்வாறு புலமை பெற்றாலே மாணவர்கள் சரியான மொழி உச்சரிப்போடு மட்டுமின்றிச் சரியான மொழியைப் பயன்படுத்தி எழுதவும் இயலும் என்று கருதியுள்ளது. இவ்வகையில், தமிழ் மொழிப் பாடத்திட்டத்தில் 4ஆம் 5ஆம் ஆண்டு மாணவர்களுக்குப் பகுக்கப்பட்ட முதன்மை திறன் மொத்தம் 6ஆகவும் 5ஆகவும் காண இயலுகிறது. இவையானது மேலும் 4ஆம் ஆண்டிற்கான உள்ளடக்கத் திறன் 15ஆகவும் 5 ஆண்டிற்கான திறன் 16ஆகவும் உள்ளடங்கியுள்ளது.

**அட்டவணை 1:**

| எண் | திறன் | ஆண்டு 4 | ஆண்டு 5 |
|---|---|---|---|
| 1 | எழுத்தியல் | 4 | 4 |
| 2 | சொல்லியல் | 1 | 0 |
| 3 | தொடரியல் | 2 | 1 |
| 4 | புணரியல் | 1 | 4 |
| 5 | வலிமிகும் இடங்கள் | 3 | 2 |
| 6 | வலிமிகா இடங்கள் | 3 | 5 |
| மொத்தம் | | 15 | 16 |

(மூலம்: கல்வி திட்ட ஆவணம் ஆண்டு 4, 5, மலேசியக் கல்வி அமைச்சு 2017)

மேற்காணும் பட்டியல் இணைவகுப்புகளில் 4ஆம் 5ஆம் ஆண்டு ஆசிரியர்கள் தமிழ்மொழி இலக்கணம் கற்பிக்கும் திறன்களைக் காட்டுகின்றது. இவ்வகையில் ஆசிரியர்கள் இவ்விரு வகுப்பினைக் கற்பிக்க மாறுபட்ட நோக்கம், பாடத் திட்டம். பயிற்று உபகரணங்கள் மட்டுமின்றிப் பயிற்சிகளையும் உருவாக்க வேண்டிய சூழலும் ஏற்படுகிறது.

## ஆய்வின் சிக்கல்

இலக்கணம் என்பது ஒரு மொழியின் ஆணிவேர் எனக் கருதலாம். அவ்வாறான இலக்கணம் கற்பதற்குத் தொடக்கப் பள்ளியானது அடிப்படையாகும். அடிப்படை இலக்கண அறிவு இல்லாத மாணவர்கள் தொடக்கப் பள்ளியிலும் மட்டுமில்லாமல் வருங்காலங்களில் இடைநிலைப்பள்ளியிலும் சிறப்பான தேர்ச்சி பெறலாகாது. இன்னும், Rathidevi (2021) கூற்றின்படி வாக்கிய அமைப்பு முறையே மொழியில் மிகவும் முக்கியக் கூறு. ஆக, இத்தகைய வாக்கிய அமைப்புக்கு உறுதுணையாக நிற்பது இலக்கணமே என்கிறார். ஆக, ஒரு மாணவன் தொடக்கப் பள்ளியில் இலக்கணப் பிழைகளைக் களையாவிடின் அவன் அடுத்தடுத்து வரும் எழுத்து வடிவிலான தேர்வு மட்டுமில்லாமல் அன்றாடம் பயன்படுத்தும் பேச்சு மொழியிலும் பிழையாகப் பயன்படுத்தக்கூடும் எனக் கருதியுள்ளார்.

மாணவர்களுக்கு இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்பிக்கும் அணுகுமுறையில் ஆளுமை பெற்றிருக்க வேண்டியது

அவசியமாகிறது. எஸ்.பி.எம்(SPM) தேர்ச்சி அறிக்கை (2017)இன் கூற்றின் படி மாணவர்கள் தொடக்கப் பள்ளியிலே இலக்கணத்தில் பின்தங்கி விடுவதே தேர்வின் வீழ்ச்சிக்குக் காரணமாகிறது எனக் குறிப்பிட்டுள்ளது. இன்னும், நிஜீஸ்ஜீஸீவீ (2019) தமது ஆய்வில் தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்கு இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியர்கள் உயர்ந்த இலக்கண அறிவு பெற்றிருக்க வேண்டும் என்பதோடு மாணவர்களுக்குப் போதுமான இலக்கண விளக்கம் அளித்துத் தெளிவு பெறவும் செய்ய வேண்டும் எனக் கருதுவதோடு கல்வி அமைச்சுக் கலைத்திட்டத்தினை மறுபரிசீலக்ச் செய்து இலக்கணம் கற்பிக்கும் நேரத்தினை மேம்படுத்தவேண்டும் என்று முன்மொழிந்துள்ளார்.

Manonmani Devi *(2017)* தமது ஆய்வில், ஆசிரியர்களின் இலக்கணம் பற்றிய பார்வையே அப்பாடத்தின் உள்ளடக்கத்தை மாணவர்களிடம் சமர்பிப்பதைச் சார்கிறது எனக் கருத்துரைத்துள்ளார். இன்னும், அவர் தம் ஆய்வில் ஆசிரியர்கள் இலக்கண அறிவை முழுமையாகக் கைவரப் பெறவில்லை என்றும் இச்சூழலே இலக்கணக் கற்றல் கற்பித்தல் அணுகுமுறையினை மந்த நிலைக்குக் கொண்டு செல்வதோடு மாணவர்களையும் பின் தங்கச் செய்துள்ளது எனக் கருதுகிறார். மேலும், ஆசிரியர்கள் இலக்கண விதிகளை முறையான அணுகு முறையின்றிக் கற்பிப்பதால் மாணவர்கள் சகிப்புத் தன்மை அடைவதாகவும் கருதியுள்ளார்.

அடுத்ததாக, கல்வி அமைச்சு ஆசிரியர்களுக்கு இணைவகுப்பு வழிநடத்தும் வழிகாட்டி ஆவணம் கொடுத்திருந்தாலும், மக்களும் சமூக அமைப்புகளும் இத்திட்டத்தினை ஏற்றுக் கொள்ளாத நிலையிலே உள்ளனர். இணைவகுப்பில் தம் பிள்ளைகளுக்கு முழுமையான கல்வி கிடைக்காமல் போகுமோ என்பது அவர்களின் ஐயப்பாடாக இருந்தது. இதனைவிடுத்து, Fui - Wan Muna Ruzana *(2019)* அரசாங்கம் இத்திட்டத்தினை மறுபரிசீலனைச் செய்ய வேண்டும் என்றும் கல்வி அமைச்சு ஏற்படுத்திக் கொடுத்த வழிகாட்டி முழுமையாக ஏற்புடைய வகையில் இல்லை எனவும் ஆசிரியர்கள் பணிப் பழுவை அதிகரிக்கச் செய்வதாகவும் ஆய்வின் வழி கருத்துரைத்துள்ளனர்.

Najla - Faridah *(2017)* எனும் ஆய்வாளர், மாணவர்களுக்குப் பழமையான கற்றல் கற்பித்தல் முறை தற்போது ஏற்புடையதாக இல்லை எனவும் அவை பெரும் மாற்றத்தை மாணவர்களிடம் ஏற்படுத்தவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆக, கற்பிக்கும் ஆசிரியர்கள், புதுமையான கற்றல் கற்பித்தல் அணுகுமுறையைக் கண்டறிய வேண்டும் எனக் குறிப்பிடுவதோடு இணைவகுப்புகளில் கற்பிக்கப்படும் அணுகுமுறையில் மாற்றங்கள் செ அவசியம் எனக் கருதியுள்ளார்.

## ஆய்வின் நோக்கம்

*1.* இணைவகுப்புகளில் தமிழ் மொழி இலக்கணக் கற்றல் கற்பித்தலில் ஆசிரியர்களின் நேர பகுப்பு ஆராய்தல்.

*2.* இணைவகுப்புகளில் தமிழ் மொழி இலக்கணத் திறன்களைக் கற்பிப்பதலில் ஆசிரியர் எதிர்நோக்கும் சிக்கல்களை ஆராய்தல்.

## ஆய்வின் அவசியம்

இவ்வாய்வானது இணைவகுப்புகளில் ஆசிரியர் இரண்டு வகுப்புகளுக்கான நேர பகுப்பு முறையைக் கையாளும் முறையையும் சவால்களையும் குறிப்பிடுகிறது. இதனைவிடுத்து ஆசிரியர்கள் எத்தகைய இலக்கணத் திறன்களை இணைவகுப்புகளில் கற்பிக்கச் சவாலை எதிர்நோக்குகிறார்கள் என்பதனையும் ஆராய்கிறது. இவ்வாய்வின்வழி ஆசிரியர்கள் இணைவகுப்புகளில் நேரம் திறன்கள் கற்பிப்பதில் எதிர்நோக்கும் சவால்களைக் கல்வி அமைச்சு அறிய இயலும். கலை மேம்பாட்டுப் பிரிவும் திறன்களுக்கு ஏற்றவாறு நேர ஒதுக்கீட்டையும் கற்றல் கற்பித்தல் அணுகுறையையும் திட்டமிட இயலும்.

## ஆய்வின் வரையறை

இவ்வாய்வு மலேசியாவில் வடக்கு மாநிலங்களில் இணைவகுப்புப் பள்ளிகளில் பணிபுரியும் தமிழ்மொழி ஆசிரியர்கள் மேல்

மேற்கொண்ட ஆய்வாகும். இவ்வாய்வில் 4 ஆம், 5 ஆம் ஆண்டு ஆசிரியர்களே இலக்கு மாதிரிகளாகப் (purposive sampling) பயன்படுத்தப்பட்டுள்ளனர். பினாங்கு மாநிலத்தில் ஓர் ஆசிரியர், கெடா மாநிலத்தில் 2 ஆசிரியர்கள், பேரா மாநிலத்தில் 3 ஆசிரியர்கள் எனப் பகுக்கப்பட்டனர். இணைவகுப்புச் சுற்றறிக்கை 2022, எண் 6 வெளியிட்ட தமிழ்ப்பள்ளிப் பெயர்களில் 6 தமிழ்ப்பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தமிழ்மொழி ஆசிரியர்களிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. மேலும், தேர்தெடுக்கப்பட்ட 6 ஆசிரியர்களும் வெவ்வேறு மாவட்ட கல்வி இலாகா சார்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆய்வின் முறைமை

இவ்வாய்வானது அளவு சார் ஆய்வு ஆகும். Creswell & Creswell *(2017)* அளவு சார் முறையானது ஆய்வாளர் ஒரு சூழலை அறிய அச்சூழலில் பட்டறிவு பெற்றவர்கள் தமது கருத்துகளை முழுமையாக எடுத்துரைக்க வாய்ப்பளிக்கும் முறை என்கிறார். இவ்வாய்வில் நேர்காணல் கேள்விகள் அரைப்பாதியாகக் கட்டமைக்கப்பட்ட கேள்விகள் என்பதால் ஆய்வாளர் ஆய்விற்கு உட்பட்டவர்கள் கூறும் பதிலிருந்து தொடர் கேள்விகள் கேட்கக் கூடும். நேர்காணலுக்கான கேள்விகள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் பல்கலைக்கழகத் தமிழ்மொழி பேராசிரியர்களிடமும் கலந்துரையாடலுக்குப் பிறகு தயாரிக்கப்பட்டது. நேர்காணலுக்கான வியாபாரம் தாயரித்தப் பிறகு அதன் தரத்தை உறுதி செய்ய மூன்று நிபுணத்துவம் பெற்றவர்களிடம் அளிக்கப்பட்டது. தமிழ் மொழி, கற்றல் கற்பித்தல் அணுகுமுறையும் கல்வி நிபுணப் பேராசிரியரிடமும் அளிக்கப்பட்டது. பிறகு அவர்கள் தம் கருத்துகளைப் பகிரச் செய்தப் பிறகு கேள்விகளைச் சீர் செய்து தர உயர்வு செய்யப்பட்டது. நேர்காணலில் கிடைக்கப்பெற்ற பதில்கள் அனைத்தும் Microsoft Word மூலம் பகுத்துப் பகுப்பாய்வு செய்யப்பட்டது. மேலும், ஆய்வுக்கு உட்பட்ட 6 ஆசிரியர்களுக்கும் Tamil Languange Teacher 1 (TLT1) எனத் தொடங்கி (ஜிலிஜி6) என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

## முந்தைய ஆய்வுகள்

இணைவகுப்புப் பள்ளிகள் பிரிட்டிஷ் காலம் முதல் கொண்டே நமது நாட்டில் காணப்படுகிறது (Karthigesu, Maggestwary & Newastheen, *2019*). அக்காலக் கட்டத்தில் அதிகமான தமிழ்ப்பள்ளிகள் சிறிய குடில் வடிவத்திலும் இங்குக் கற்கும் மாணவர்கள் எத்தகைய ஆண்டிற்கு ஏற்ற பகுப்பும் கலைத்திட்டமும் இல்லாமலே கற்றுள்ளனர். இதனைத்தொடர்ந்து, இங்கு ஆசிரியர்களாகப் பணிபுரிபவர்கள் கோவிலைச் சார்ந்த ஐயர்களாகவும் பிறகு இந்தியா, இலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்ட ஆசிரியர்களாக இருந்துள்ளனர். அப்போதைய கல்வி அமைச்சு எத்தைகைய கலைத்திட்டமும் இன்றிக் கல்வியானது படித்தல், எழுதுதல், எண்ணுதல் ஆகிய மூன்று திறனையே அடிப்படையாகக் கொண்டிருந்துள்ளது. நாட்டின் சுதந்திரத்திற்குப் பிறகு இணைவகுப்பு நாட்டில் ஆங்காங்கு மாணவர்கள் எண்ணிக்கை குறைவு, ஆசிரியர் பற்றாக்குறை போதுமான வகுப்பறைகள் குறைவு என்பதாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனாலும், அவ்வப்போது இணைவகுப்புகளை வழிநடத்தும் வழிகாட்டி ஆவணம் அரசாங்கத்தாலோ இதர மூலத்தில் அச்சு வடிவத்தில் இல்லாமலோ இருந்துள்ளது.

இணைவகுப்பிற்கான சிறப்பு வழிகாட்டி நூல் முதன் முறையாகக் கல்வி அமைச்சால் 1982 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சிறப்பு வழிகாட்டியானது, மலேசியாவின் கலைத்திட்ட மேம்பாட்டு உதவியோடு மட்டுமின்றி ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (ஹிழிமிசிணிதி) ஆதரவோடும் தயாராகியது. இவ்வழிகாட்டியில், இணைவகுப்பிற்கு ஓர் ஆசிரியர், ஒன்றுக்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு ஒரே நேரத்தில் கற்பிக்கும் கற்றல் முறை என்று பொருள் அளித்திருந்தது. இச்சிறப்பு வழிகாட்டி ஒரே வகுப்பில் பல்தரப்பட்ட மாணவர்களுக்குப் கற்பிக்கும் அணுகுமுறை

மற்றுமின்றிக் கற்றல் கற்பித்தலுக்கான சில உபகரணங்களையும் ஏற்படுத்தித் தந்துள்ளது. மேலும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கும் இணைவகுப்பில் கற்பிக்கும் முறையினை எடுத்துரைக்கும் வழிகாட்டியாகவும் விளங்கியது.

Karthigesu, Maggestwary & Newastheen (2019) தனது ஆய்வின் தலைப்பான பல்தர வகுப்பு அமலாக்கமும் குறைந்த மாணவர்கள் பள்ளியின் ஆசிரியர்கள் எனும் தலைப்பிலும் ஆய்வினை மேற்கொண்டார். இவ்வாய்வு ஆசிரியர்கள் இணைவகுப்பில் கற்பிக்கத் தயாராகும் உத்திநிலையை ஆராயும் வகையில் அமைந்திருந்தது. இவ்வாய்வு 16 இணைவகுப்பு ஆசிரியர்களைக் கொண்டு வழிநடத்தப்பட்டது. நேர்காணல், ஆவணங்களை ஆராய்தல் மேலும் பதிவுநாட ஆராய்தல் என ஆய்வு முறையினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. மேலும், ஆய்வின் நம்பகத்தன்மை அதிகரிக்க முப்பரி பகுப்பாய்வு செய்து, ஆய்வின் முடிவு கண்டறியப்பட்டது. ஆய்வு, அதிகமான ஆசிரியர்கள் இணைவகுப்புப் பள்ளிகளில் இத்தகைய புதிய கற்றல் கற்பித்தலை ஏற்றுக்கொள்ளும் வகையில் இருந்தாலும் குறிப்பிட்ட ஆசிரியர்கள் இத்தகைய ஏற்றுக் கொள்ளாதவராகவே இருக்கின்றனர் என்று கண்டறிந்து உள்ளார். இதனைத் தொடர்ந்து ஆய்வாளர், இணைப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் போதுமான தரவுகள் வழங்க வேண்டும் எனவும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கற்கும் பயிற்சி ஆசிரியர்களுக்கு இணைவகுப்பில் கற்பிக்கும் முறையினை வழிவகுக்க வேண்டும் என முன்மொழிந்து உள்ளார்.

Fui & Wan Muna (2019), நெகிரி செம்பிலானில் கல்வி அமைச்சின் இணைவகுப்பு வழிகாட்டியின் ஏற்புடைமையும் இணைவகுப்புகளில் கற்றல் கற்பித்தல் மேற்கொள்ளும் முறையும் எனும் தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டனர். இவ்வாய்வு அளவு சார் விளக்க முறை ஆய்வாக 123 அம்சங்களைக் உள்ளடக்கி இருந்தன. மொத்தம் 106 ஆசிரியர்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஆய்வின் கண்டுபிடிப்பானது 63% ஆசிரியர்கள் இணைவகுப்பில் நிறைய சவால்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் 37- ஆசிரியர்கள் குறைந்த சவால்களையே எதிர்நோக்குகின்றனர் என்றும் கண்டறிந்தது. இன்னும், 63% ஆசிரியர்கள் இணைவகுப்பு வழிகாட்டி ஏற்புடையதாக உள்ளது எனவும் 37% ஆசிரியர்கள் ஆவணமானது குறைந்த ஏற்புடமை தன்மையைக் கொண்டுள்ளது எனக் குறித்துள்ளனர். இன்னும், ஆசிரியர்கள் பாடத்திட்டத்தில் உள்ள திறன்களை முழுமையாகச் சேர்ப்பதில் சவால்களை எதிர்நோக்குகிறார்கள் என்பதனையும் தமது ஆய்வின் வழி வலியுறுத்தியுள்ளனர்.

அடுத்ததாக, Gevina & Nurfadilla (2021) மாறுப்பட்ட கற்பித்தல் அணுகுமுறையும் குறைந்த பள்ளி மாணவர்கள் கொண்ட இணைவகுப்புகளில் ஆசிரியர்களின் அமல்முறையும் எனும் தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். இவ்வாய்வானது literatur sistematik அணுகுறையைக் கொண்டு 109 ஆய்வுக் கட்டுரைகளைக் கண்டறிந்து, பிறகு 7 ஆய்வுக் கட்டுரைகள் நுண்ணியமுறையில் ஆய்வு செய்து எழுதப்பட்டதாகும். ஆய்வானது, இணைவகுப்பு மாறுபட்ட கற்றல் கற்பித்தல் புரிய பெரும் பங்காற்றுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வளவில், இணைவகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவணின் குண இயல்புகளையும் புரிந்தவர்களாகவும் இருக்கின்றனர் எனக் கருதவதோடு ஆசிரியர்கள் இணைவகுப்பு வழிநடத்த புதிய மேலும் மாறுபட்ட அணுகுமுறையைக் கண்டறிய வேண்டும் என முன்மொழிந்துள்ளார்.

தொடர்ந்து, Chandru (2019) Students Team Achivement Division அணுகுமுறை வழி 4, 5 ஆம் ஆண்டு தமிழ்மொழி வாக்கிய அமைத்தல் திறனை மேம்படுத்துதல் எனும் செயலாய்வினை மேற்கொண்டுள்ளார். மாணவர்கள் இணைவகுப்புகளில் நோக்கத்தினை அடைய ஒருவருக்கொருவர் உதவி கொள்வதைப் பார்க்க இயன்றதாகவும் அதேதருணத்தில்சில பின் தங்கிய மாணவர்கள்

தனது ஆற்றலை வெளிப்படுத்த சரியான வாய்ப்பு அளிக்காததால் கற்றல் கற்பித்தலின் ஈடுபடமால் ஒதுங்கியிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். இன்னும், ஆய்வாளர் ஆய்வின் முடிவாக இணைவகுப்பு மாணவர்கள் புதிர்ப்போட்டியும் இதர வகை போட்டியும் இருப்பின் தாம் மாறுபட்ட ஆண்டு என்ற சிந்தனையை விடுத்து Students Team Achivement Division கூறுகளைப் பின்பற்றி வெற்றி பெற அதிக முயற்சி செய்வதோடு முன்னறிச்சோதனைக் காட்டிலும் பின்னறிச் சோதனையில் புள்ளிகளின் தேர்ச்சி அதிகரித்து உள்ளது எனக் குறித்துள்ளார்.

Izci, Duran & Tasar *(2010)* துருக்கி நாட்டில் வினாநிரல் பாரம் மூலமாகப் பல்தர வகுப்புக் கொண்ட 82 பள்ளிகளைச் சார்ந்த 185 ஆசிரியர்களை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். ஆய்வின் கண்டுபிடிப்பாக ஆசிரியர்கள் பல்தர வகுப்புக் கற்பித்தலில் குறைந்த மேலும் அதிகமான ஆண்டுகள் பணிபுரிந்த அனுபவம் கொண்டவர்களாக இருந்தாலும் இத்தகைய வகுப்புகளை வழிநடத்துவதில் சாவல்களை எதிர்நோக்கவே செய்கின்றனர் எனக் கருதியுள்ளனர். மேலும், இத்தகையப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பணியாற்ற விரும்பவதில்லை எனவும் வேறு பள்ளிகளுக்கு மாற்றலாக ஆர்வம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளனர். இதனைவிடுத்து ஆய்வாளர் துருக்கியில் அதிகப்படியான பல்தர வகுப்புப் பள்ளிகள் இருப்பதால் அரசாங்கமும் பல்கலைக்கழகங்களும் இச்சிக்கலைக் கருத்தில் கொண்டு உடனடியாகத் தீர்வு காணும் வழிகளைக் கண்டறிய வேண்டும் என முன்மொழிந்துள்ளார்.

ஷிணீரீ *(2009)* தமது ஆய்வினைப் பல்தர வகுப்பு மாணவர்களுக்குப் கற்பிக்கும் 38 ஆசிரியர்கள் மேல் மேற்கொண்டுள்ளனர். ஆய்வில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களும் பல்தர வகுப்புக் கற்பித்தலானது பல்வகை சவால் கொண்டதாகவும் ஆசிரியர்களுக்கு மன உளைச்சலை உண்டாக்கும் தன்மை கொண்டதாகவும் அமைந்துள்ளது என ஆராய்ந்து உறுதி படுத்தியுள்ளார். ஆய்வின் பரிந்துரையாக இணைவகுப்புக் கற்பிக்கும் திறனையும் ஆற்றலையும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலே பயிற்விக்க வேண்டும் எனவும் அவ்வாறு செய்தாலே இணைவகுப்புக் கற்றல் கற்பித்தல் சவால்களையும் அதனைக் கையாளும் முறையினையும் அறிய முடியும் எனக் கருதியுள்ளார்.

### ஆய்வின் கண்டுபிடிப்புகள்

இப்பகுதியில் ஆசிரியர்கள் இணைவகுப்பில் தமிழ்மொழி இலக்கணம் கற்பிக்கும் போது எவ்வாறு இரு வகுப்புகளுக்கும் நேரப் பகுப்புச் செய்கிறார்கள் என்பதனை ஆராய்கிறது. இதனைத் தவிர இரு வகுப்பு இலக்கணத் திறன்களில் எத்தகைய திறன்களைப் கற்பிக்க ஆசிரியர்கள் சவால்களை எதிர்நோக்குகிறார்கள் என்பதனையும் ஆராய்ந்துள்ளது.

### இணைவகுப்பில் இலக்கணக் கற்பித்தலில் நேரப் பகுப்பில் எதிர்நோக்கும் சவால்கள்

முதன்மையாக ஆசிரியர்கள் இணைவகுப்பில் நேர ஒதுக்கீட்டின் அடிப்படையில் கேள்விகள் எழுப்பப்பட்டன. கற்றல் கற்பித்தல் நேரப் பகுப்பு, வகுப்பில் 3 நிலை மாணவர்களுக்கான நேரப் பகுப்பு மேலும் இணைவகுப்புகளுக்கான நடவடிக்கை நேரப் பகுப்பு என ஆராயப்பட்டுள்ளது. ஆய்வின் கண்டறிதலானது, ஆசிரியர்கள் ஒரு நாளைக்கு 1 மணி நேரம் பாடம் இருப்பின் ஒவ்வொரு வகுப்பிற்கும் 30 நிமிடமே ஒதுக்க வேண்டியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

### எடுத்துக்காட்டாக:

“ஒரே வகுப்பில் இரு ஆண்டு மாணவர்கள் அமர்ந்திருக்கிறதனால 1 மணி நேரத்தை ஒரே வகுப்புக்கு கொடுக்க முடியாது. ரெண்டு வகுப்பையும் பார்க்கனும் 30 நிமிசம் 30 நிமிசம் ஒதுக்கனும்”. *(*TLT1*)*

“அரை மணி நேரம் அரை மணி நேரம் மட்டும்தான் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒதுக்க முடியும், இலக்கண விதிகளைச் சொல்லிக்கொடுக்கிறது, புரிய வைக்கிறதுக்கும் அரை மணி நேரம் சரிப்பட்டுவராது”. *(*TLT4*)*

“நான் கிட்டதட்ட அரை மணி நேரம்

அரை மணி நேரம் தான் ஒதுக்குகிறென், ஆனால், அந்த அரைமணி ஒதுக்கிறது போதுமா மாணவர்கள் எல்லாரும் பாடம் புரிஞ்கிகிறார்களா என கேட்ட முழுமையா இல்லதான் சொல்லனும் சார்". (TLT5)

"நேர ஒதுக்கீடு பார்க்கணும்னா ஞயமா 30 நிமிசம் 30 நிமிசம் ஒதுக்கி ஆகனும், எல்லா திறன்களுக்கும் அது சரி பட்டு வராது. ஆனால், பெரும்பாலும் இலக்கணத் திறனுக்கு நான் பாதி பாதி நேரம் தான் பிரிக்கிறேன்". (TLT6)

இவ்வளவில், இரு ஆசிரியர்கள் திறன் அடிப்படையிலே நேர ஒதுக்கீடு செய்வதாகக் குறிப்பிட்டுள்ளதைக் காண இயலுகிறது. குறிப்பிட்டத் திறன் போதிக்க அதிகமான விளக்கம் அளிப்பதாக இருப்பின் அதிக நேரம் அவ்வகுப்பிற்குச் செலவிடப்படுகிறது எனக் குறித்துள்ளனர். சான்றாக:

"நான் திறனுக்கு ஏத்த மாதிரிதான் நேரத்தை ஒதுக்கிறேன், எந்த வகுப்பு திறன் சொல்லிக்கொடுக்க நேரம் அதிகம் தேவைப்படுதோ ம்ம்ம்... அங்க அதிக நேரம் எடுத்துக்குவேன் இன்னொரு ஆண்டுக்கு நேரம் கொஞ்சம் குறைஞ்சிடும்" (TLT2)

"நேர ஒதுக்கீடு பார்த்திங்கினா சொல்லிக்கொடுக்கிற திறன் பொருத்துதான் இருக்கு சார், சில எளிதான திறன் 'இசியா' புரிஞ்சிடும். சில திறன் ஒரு வகுப்புக்குக் கஷ்டமா இருக்கும்...ம்ம்..அப்ப திறன் 'பேஸ்' தான்". (TLT3)

ஆசிரியர்கள் இரு வகுப்பில் 4 முதல் 6 தர மாணவர்கள் இருப்பதால், குறைந்தது ஒரு மாணவருக்கு 4 முதல் 5 நிமிடமே ஒதுக்க இயலுகிறது என்று குறிப்பிட்டுள்ளனர். ஒரே வகுப்பின் இருப்பின் 3 தர மாணவர்களே இருப்பார்கள். ஆனால், இணைவகுப்பாக இருப்பதால் 4 முதல் 6 தர மாணவர்கள் இருப்பதாகவும் போதுமான இலக்கண விளக்கங்கள் தர இயலாமல் போகும் நிலை ஏற்படுகிறது எனவும் கருதியுள்ளனர். சான்றாக:

"நடுநிலை மற்றும் கடைநிலை மாணவர்கள் இலக்கண விதிகளைப் புரிஞ்சுக்க கஸ்டம் படறாங்க அதனால தனி தனியா நான் 5 நிமிசம் ஒதுக்கிறேன்". (TLT1)

"முன்னலாம் ஒரே வகுப்க்ச் சொல்லிகொடுக்கறப்பே, 3 தர மாணவங்கள் மட்டுமே நாம பார்க்க முடியும், இங்கே ரெண்டு கிலாசு அப்ப அஞ்சு ஆறு ரக மாணவர் இருபாங்க, நல்ல படிக்கிற மாணவங்க பாரவாயில்லே பின் தங்கிய மாணவங்க நிலமை இன்னும் மோசமாகுது". (TLT2)

"மொத்தம் 6 ரகம் இக்காங்கா சார், உண்மையே சொல்லனும்னா, ரெண்டு கிளாசுக்கும் பாட விளக்கம் கொடுத்துதற்குப் போக, நடுத்தர மாணவர்களையும் பின் தங்கிய மாணவர்களையும் பார்க்க நாலு அஞ்சு நிமிசம் மட்டும்தான் இருக்கும், அதும் சில நேரங்களிலே இல்லாமே போகும்". (TLT4)

"சார் நான் அவங்களுக்குனு 5 நிமிசம் எப்போதும் ஒதுக்குவேன், இது இலக்கணம் சார் மொழியின் அடிப்படை 5 நிமிசம் ஒதுக்குள்ளனா, அவங்களைப் பாடத்தைப் பின் தொடர முடியாது சார்". (TLT5)

இதனைவிடுத்து, ஓர் ஆசிரியர் வகுப்பில் இருக்கும் பின் தங்கிய மாணவர்களுக்குப் பள்ளி முடிந்து கூடுதல் வகுப்பு வைப்பதாகவும் மற்றொரு ஆசிரியர் பள்ளி விடுமுறை நாளான சனிக்கிழமைகளில் மாணவர்களை அழைத்து, வகுப்பு மேற்கொள்வதையும் காண இயலுகிறது. சான்றாக:

"இலக்கணத் திறனுல சிலது 'ஈசியா' சொல்லிகொடுத்திடலாம். ஆனா சில திறன் கஸ்டம். 'கிளாஸ்' நேரத்தில சொல்லிக்கொடுக்க முடிலன... 'ஸ்கூல்' நேரத்தில சொல்லிடக்கொடுக்க முடிலான 'அஃதெர் ஸ்கூல்' நேரத்திலதான் சொல்லிக்கொடுப்பேன்". (TLT3)

"இது தோட்டப்புறம் சார், மாணவர்கள் நாமள நம்பி இருக்காங்க, வகுப்புல 6 நிலை மாணவர்களை கவனிக்கனும்னா உண்மையாவே முடியில... நான் இலக்கண திறன் விட்டுப்போற மாதிரி தொனுச்சுனா... சத்தர்டேய் வர சொல்லி கற்றுக்கொடுப்பேன் சார்". (TLT6)

ஆசிரியர்கள் இரு வகுப்பிற்கும் பாடத்திட்டத்தில் திட்டமிட்டபடி வகுப்பினை வழிநடத்த போதுமான நேரம் இருப்பதில்லை என்று எடுத்துரைத்துள்ளனர். இரு வகுப்பிற்கும் திறன் மாறுபடுவதால் பல நேரங்களில் ஒரே மாதிரியான நடவடிக்கை மேற்கொள்ள இயலாது என்றும் குறைந்தது இரு வகுப்பிற்கும் மொத்தத்தில் 5 நடவடிக்கையாவது குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று கருதியுள்ளனர். இவ்வாறு, 5 முதல் 6 நடவடிக்கையைத் திட்டமிட்டிருந்தாலும் ஒரு வகுப்பிற்கு 2 நடவடிக்கையே மேற்கொள்ள முடிகிறது என கருதியுள்ளனர்.சான்றாக:

*"சார் ஆர்.பி,எச்ல (பாடத்திட்டம்) நாம இணைவகுப்புக்கு 3 நடவடிக்கை போட முடியாது, ரெண்டு வகுப்புனால குறைந்தது 5 அதிகப்பட்சம் 6 எனதான் போட முடியும், இல்லாட்டி கேள்வியா ஆயிடும், ஆனா, நமக்கு 4 நடவடிக்கை செய்ய மட்டும்தான் நேரம் இருக்கும்,.. 'டைம்' எடுத்திடும்"(*TLT2*)*

*"இங்க பேராக்லே* Collaborative Instructional Design System (CIDS) *என ஒரு 'ஒன்லைன்' லே பாடத்திட்டத்தைச் செய்யனும் சார். இதுலே 'கொம்பாயின் கிலாஸ்'க்கு மூனு நடவடிக்கை மட்டும் இருந்துச்சுனா கேள்வி கேட்பாங்க சார், அதனால 5 நடவடிக்கை போடுவேன். ஆனால், 4 நடவடிக்கைகே 1 மணி நேரம் போயிடும். மாணவருக்குப் பயிற்சி வீட்டுப்பாடமா கொடுப்பேன்".*(TLT3)

*"சார்... இதுவரைக்கும் நான் பாடத்திடத்தில் உள்ள மாதிரி 6 நடவடிக்கையே முடிச்சுதே இல்லே. அதிகபட்சம் மூனு இல்லன நாலு, யேனா நாம பக்கதிலே இருந்ததான் பயனுங்க நடவவடிக்கை செய்றானுங்க,,இலக்கணம்,, சார் நல்லா விளங்கனாதான் செய்ய முடியும் அப்ப முனு நாலுதான்". (*TLT4*)*

*"வாசிப்புக்கு 6 நடவடிக்கை போடலாம் சார், யேன அதுல எழுத்து பயிற்சி குறைவா இருக்கும், இலக்கணம் புரிஞ்சுகிட்டாங்களா சோதிக்க, எழுத்துப் பயிற்சி கண்டிப்பா வேனும்.... ஒரு வகுப்புக்கு 2 பயிற்சி அவ்வளவுதான்".*(TLT5*)*

இதனைவிடுத்து ஆசிரியர்கள் 6 நடவடிக்கை மேற்கொள்ள போதுமான நேரம் இருக்கும் ஆனால், நாம் அதற்கான முன் ஏற்பாடுகள் சரிவர செய்திருக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளனர். கணினி உதவி, தேவையான பயிற்சித் தாள் இருந்தால் சாத்தியமாக வாய்ப்புள்ளது என்று கருதியுள்ளனர்.

*"நான் சில 'வீடியோ'வ பதிவிறக்கம் செஞ்சுக்குவேன் சார், பிள்ளைகளுக்குப் போட்டுகாட்டுற நேரத்தில இன்னொரு வகுப்புக்கு ஒரு நடவடிக்கை செஞ்சிடுவேன். தொடர்ந்து, நடவடிக்கை கொடுக்கறாப்பே எளிதா கொடுத்திடுவேண் கேள்வி அதிகமா இருக்காது... இப்படி செஞ்ச முடிப்பேன்"(*TLT1*)*

*"ஒரு வகுப்புக்கு 3 நடவடிக்கை என 2 வகுப்புக்கு 6 நடவடிக்கை நான் செஞ் சிருக்கேன் சார், ஆனால் இலக்கண கேள்வியெல்லாம் சுலபமாக இருக்கணும், படித்தவுடன் புரிகிற மாதிரி கொடுத்துட்டா முடியும். ஆனால், கேள்வி 4 மற்றும் 5ஆம் ஆண்டு தரத்திற்கு இருக்காது,* Tahap Penguasaan *(மாணவர் அடைவுநிலை)கக்குச் சரியா வராது.(*TLT6*)*

### இணைவகுப்பில் இலக்கணத் திறன்களைக் கற்பிப்பதில் எதிர்நோக்கும் சவால்கள்

இணைவகுப்பிற்கு ஒருங்கிணைக்கப்பட்ட தர ஆவணம் கலை மேம்பாட்டுப் பிரிவால் 2022 உருவகிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இந்த ஆவணமானது 4ஆம், 5ஆம் ஆண்டு திறன்களை எவ்வாறு இணைத்துக் கற்பிக்கலாம் என்பதனை ஆசிரியர்களுக்கு உணர்த்தும் வழிகாட்டி எனலாம். இவ்வளவில், ஆவணம் இலக்கணம் கற்பிக்க ஆசிரியர்களுக்கு ஏற்புடையதாக அமைந்துள்ளதா என்பதனை ஆராயும் போது குறிப்பிட்ட திறன்கள் ஒருங்கிணைக்க சுலபமாகவும் சில திறன்கள் ஒருங்கிணைக்க கடினமாகவே உள்ளது எனக் கூறியுள்ளனர். எடுத்துக்காட்டாக:

*"பெரும்பாலும் திறன்கள் ஒருங்கிணைக்க முடியுது சார், எடுத்துக்காட்டுக்கு வலிமிகும் வலிமிகா இடங்கக்ச் சொல்லிக் கொடுக்க 'ஈசியா' இருக்கு சார் ஏனா அது ரென்டையும்*

*ஒருங்கினைக்கலாம். நாலப்புக்கு வலிமிகும் சொல்லிக்கொடுக்கறப்ப அஞ்சாபுக்கும் வலிமிகா இடத்தை சொல்லிக்கொடுத்திடலாம் சுலபமா இருக்கும்" (*TLT2*)*

*"என்னால 80% பின்பற்ற முடியுது சார், அதைதான் பின்பற்றறேன். இலக்கண ஒருங்கிணைப்பு நல்லா வழிகாட்டியா இருக்கு சார்". (*TLT5*)*

*"முக்காவாசி என்னால பின்பற்ற முடியுது, இது முன்னுக்கு பாட புத்தகத்துக்கு ஏத்த மாதிரி திறனை இணைச்சி சொல்லிக்கொடுத்துக்கிட்டு இருந்தேன், இப்ப இதெ வெச்சு பின்பற்றராப்ப சுலபமா இருக்கு". (*TLT6*)*

*"நான் ஆவணத்தை பின்பற்றது கிடையாது சார், ஏன சில சமயங்களில் குறிப்பிட்ட மாணவர்களுக்கு ஒரு திறனை ஒரு நாளுல சொல்லிக்கொடுத்திட முடியாது. உதாரணத்திற்கு நாலப்புக்குத் தொடர் வாக்கியத்தையும் அஞ்சாபுக்கு நேர்க்கூற்று அயற்கூற்று சொல்றப்ப ரெண்டும் வாக்கிய அமைப்பு அப்ப கஷ்டம் சார்".(*TLT1*)*

*"நான் பின்பற்றது கிடையாது, சார் ஐந்தாம் ஆண்டுலே ஒரே மாணவர் நால சில சமயத்திலே பள்ளிக்கு வரமாட்டான் அப்ப என்னால பின்பற்ற முடியில". (*TLT3*)*

*"முடியில சார் பெமெத்தான் (ஒருங்கிணைக்கப்பட்ட 4ஆம் மற்றும் 5ஆம் ஆவணம்) பாத்திங்கனா, சில நேரத்தில ஒரு திறனுக்கு 2 கற்றல் தரம் சொல்லிக்கொடுக்கலாம், சில நேரத்தில 1 கற்றல்தரம் தான் வருது அப்ப பின்பற்ற முடியில" (*TLT4*)*

ஆசிரியர்கள் இணைவகுப்புகளில் குறிப்பிட்டத் திறன்களைப் கற்பிக்க அதிக நேரம் தேவை; அத்தகைய திறனை 30 நிமிடங்களில் கற்பிக்க இயலாது எனக் குறித்துள்ளனர். இவ்வாறு கடினமான திறனைப் கற்பிக்க மாணவர்களுக்குத் துல்லியமான விளக்கம் தேவை என்பதால் சில தருணங்களில் இரு பாட வேளைகளிலே திறனின் நோக்கத்தை அடைய முடிகிறது என்று கூறியுள்ளனர். அவ்வாறு ஒரு வகுப்பிற்கு இரு வாரங்கள் கற்பிக்கும் போது ஒருங்கிணைக்கப்பட்டத் தர ஆவணத்தைப் பின்பற்ற இயலாமல் போகின்ற சூழல் ஏற்படுகிறது எனக் குறித்துள்ளனர். அதுமட்டுமின்றி, வாக்கிய வகையாகத் தோற்றமளிக்கும் இடைச்சொற்கள், செய்வினை, செயப்பாட்டுவினை, தொடர் வாக்கியம், நேர்க்கூற்று, அயற்கூற்று, இலக்கணத்தில் கடினமான பகுதி புணர்ச்சியைக் கற்பிக்க இணைவகுப்பு சவலாகவே அமைந்துள்ளது. சான்றாக:

*"இணைவகுப்புல இலக்கணம் கற்பிக்கறாப்ப சில திறனை கத்துகொடுத்திடலாம். ஆனா, சில திறனை கத்துகொடுக்க நிறைய நேரமும் விளக்கமும் தேவை, எடுத்துகாட்டுக்கு, நேர்க்கூற்று, தொடர்வாக்கியம், இடைச்சொல் என பாக்கிறப்ப, அது வாக்கியமா இருக்கும் அப்ப அந்த திறனை முடிக்க முடியாது". (*TLT1*)*

*"வேற்றுமை உருபு, வலிமிகா வலிமிகும் இடங்கள போதிக்கறப்ப அது சொற்றொடர் வடிவத்தில சொல்லிக்கொடுத்திடலாம் ஆனா, தொடர் வக்கியம், கலவை வாக்கிய சொல்றப்ப அது கடினமாகத்தான் இருக்கும்" (*TLT2*)*

*"எது வாக்கிய வகையிலே இருக்கோ சார் அது சொல்லிகொடுக்க இணைவகுப்பில கஷ்டமாதன் இருக்கு". (*TLT3*)*

*"புணர்ச்சி இலக்கணத்திலே கடினமான பகுதியா இருக்கு சார் அது சொல்லிக் கொடுக்கிறப்ப. ம்ம்ம்.. இணைவகுப்பு சவலாகத்தான் இருக்கு". (*TLT4*)*

*"நல்ல கட்டுரை எழுதறத்துக்கு, வாக்கிய அமைப்பு முக்கியம், அப்படி பார்க்கிறப்பா வாக்கிய அமைப்பு சொல்ற தொடர் வாக்கியம், இடைச் சொல் நல்ல சொல்லிக்கொடுக்கணும் ஆனா, போதிக்கறப்பா போதிய விளக்கம் கொடுக்க முடியில". (*TLT5*)*

*"எனக்கு நேர்க்கூற்று அயற்கூற்று, முக்கியமா புணர்ச்சி சொகல்லிக்கொடுகறப்ப குறிபிட்ட நேரத்தில முடிக்க முடியில சார்". (*TLT6*)*

## ஆய்வின் முடிவுகள்

ஆசிரியர்கள் இணைவகுப்புகளில் ஒவ்வொரு வகுப்பிற்கும் அரை மணி நேரமே ஒதுக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது என்பது ஆய்வு அறிவிக்கின்றது. இதனால், ஆசிரியர்கள் தமிழில் குறிப்பிட்ட இலக்கணத் திறனை முழுமையாக மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்க இயலாத சூழல் ஏற்படுகிறது. குறிப்பிட்ட இலக்கண விதிகள் 30 நிமிடங்கள் கற்பிக்க இயலாது. கலைத் திட்ட மேம்பாடு பகுதி ஒரு சில இலக்கணத் திறனை ஒரு பாட வேளைக்கு 1 என வகுத்துள்ளது. அதாவது, குறிப்பிட்ட திறனானது கற்பிக்க 1 மணி நேரம் தேவை என்பது காரணமாகக் கொண்டதால் அவ்வாறு திட்டமைக்கப்பட்டது. இவ்வளவில், இணைவகுப்பில் 2 மணி நேர இலக்கணத் திறனை ஒரே நேரத்தில் கற்பிப்பது ஆசிரியர்களுக்குச் சவால் என்றே கூறலாம். இதனையே Msimanga *(2014)* தனது ஆய்வில் இக்கருத்தினை ஆதரிக்கும் வகையில் இணைவகுப்பில் ஆசிரியர்கள் முழுமையாகக் கலைத்திட்டத்தில் உள்ள திறன்களை முடிக்கலாகாது என்றும் 60% முதல் 70% மட்டுமே முடிக்க இயலும் என்று ஆய்வில் குறிப்பிட்டுள்ளனர். இதனைவிடுத்து, ஆசிரியர்கள் ஒரு வகுப்பில் பாடம் கற்பிக்கும் போது மற்றொரு வகுப்பிற்கு இடுபணி கொடுத்திருந்தாலும், ஒரு சில மாணவரே சுயமாக இயங்குவதாகவும் பெரும்பாலான மாணவர்கள் ஆசிரியர்களை எதிர்பார்க்கவே செய்கின்றனர். ஆகவே, குறிப்பிட்டு 30 நிமிடம் என்று கருதினாலும் அடுத்த 30 நிமிடங்களுக்கும் ஆசிரியரின் உதவி மாணவர்களுக்குத் தேவையாகவே உள்ளனர்.

பொதுவாக வகுப்பு என்றானது கெட்டிக்கார, நடுத்தர, பின்தங்கிய மாணவர்கள் என மூவகை தர மாணவர்களைக் கொண்டிருக்கும். இவ்வளவில் இணைவகுப்பு எனின் 4 முதல் 6 தர மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. இலக்கணம் ஒரு மொழியின் ஆணி வேராகும். தெளிவான இலக்கண அறிவு இல்லையெனின் மாணவர்களால் பிழையின்றிச் சொல், சொற்றொடர், வாக்கியத்தை உருவகிக்க இயலாது. ஆக, இணைவகுப்புகளில் பயிலும் எத்தர மாணவர்கள் ஆயினும் இலக்கண அறிவு பெற்றிருப்பது அவசியம். ஆனால், இணைவகுப்புகளில் பின் தங்கிய மாணவர்களைக் கண்காணிப்பது ஆசிரியர்களுக்கான சவாலாகும். (Kristi, *2016)* தமது ஆய்வில் இக்கருத்தையே இணைவகுப்புகளில் மாணவர்கள் நாளுக்கு நாள் பின் தங்கும் சூழல் உருவாகிறது என குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில் நடுநிலை மாணவர்களையும் பின் தங்கிய மாணவர்களையும் 5 முதல் 6 நிமிடமே ஒதுக்கி குறைநீக்கல் புரிய முடிகிறது எனவும் இந்நேரமானது முற்றிலும் பற்றாக்குறையே என்று ஆய்வின் வழி கருதுதப்பட்டுள்ளது. இன்னும், வாக்கிய அமைப்பை அடிப்படையாகக் கொண்ட திறனைப் கற்பிப்பது மேலும் சாவலுக்கு உரியதாக அமைந்துள்ளது என்பது ஆசிரியர்களின் குறைப்பாடாக அமைந்துள்ளது.

தொடர்ந்து, இணைவகுப்புகளில் ஆசிரியர் இலக்கணத்திற்கு வகிக்கப்பட்ட நடவடிக்கைகள் முழுமையாக மாணவர்களுக்குக் கொண்டு சேர்க்க முடியவில்லை. திறன் ஒருங்கிணைப்பில் திறன்கள் மாறுப்பட்டிருப்பதால், மாறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படுகிறது. இதனால், ஆசிரியர்கள் 5 முதல் 6 நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும், இணைவகுப்புகளில் ஒரு வகுப்பிற்கு 2 என இரண்டு வகுப்பிற்கு 4 இலக்கண நடவடிக்கையே மேற்கொள்ளளப்படுகிறது. இதனைவிடுத்து, 6 நடவடிக்கை திட்டமிட்டப்படி ஏற்பாடு செய்திருந்தாலும், நடவடிக்கையில் மேற்கொள்கின்ற பயிற்சிகள் மிக குறைவாகவும் வினாக்கள் 4, 5ஆம் ஆண்டுக்கான தரத்திற்கு இல்லாமல் மிக எளிமை படுத்த வேண்டிய சூழல் ஏற்படுகிறது. தற்போது கல்வி அமைச்சு உயர் தரச் சிந்தனைக் கேள்விகள் மாணவர்களுக்கு அளிக்க பட வேண்டும் அதுவே அவர்களில் சிந்தனைத் தூண்டலை அதிகரிக்க செய்யும் என கருதும் இத்தருவாயில் இணைவகுப்பு மாணவர்களுக்கு மிக எளிமையான கேள்விகளை அளிப்பது ஏற்புடையதாகவும்

இல்லை. இன்னும், ஆசிரியர்கள் பள்ளி நேரம் போக மாலை வகுப்பும் விடுமுறை கால வகுப்பும் கற்பிக்கும் சூழலானது இலக்கணக் கற்றல் கற்பித்தலுக்கான நேரம் இணைவகுப்புகளில் பற்றாக்குறையாக உள்ளது என உறுதிப்படுத்துகிறது.

கலை மேம்பாடு பிரிவு 2022இல் தமிழ்மொழி திறன் ஒருங்கிணைப்பு ஆவணம் ஏற்படுத்தி ஆசிரியர்களுக்கு வழங்கி இருப்பது, இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. ஆசிரியர்கள் இந்த ஆவணத்தில் குறிப்பிட்டிருக்கும் ஒருங்கிணைப்புக்கு ஏற்ப தமது பாடத்திட்டத்தினை உருவகித்துக் கற்பிக்க ஏற்புடையதாகவும் அமைந்துள்ளது. இவ்வளவில் ஒருங்கிணைப்பு ஆவணத்தில் குறிப்பிட்டவாறு சில ஆசிரியர்கள் பின் பற்ற இயலவில்லை. Phindile *(2014)* இதனையே தமது ஆய்வில், ஆசிரியர்கள் மாறுபட்ட ஆண்டுகளின் பாடத்திறன்களை இணைப்பது கடினம் அவ்வாறு இணைத்தாலும் இடையூறுகள் இருக்கவே செய்யும் என்கிறார். இவ்வளவில் சில பள்ளிகளில் ஓர் ஆண்டில் ஒரு மாணவனே இருக்கும் போது அம்மாணவன் பள்ளிக்கு வர இயலாத போது ஒருங்கிணைப்பைப் பின்பற்ற இயலாமல் போகிறது. இதனைத் தவிர எளிமையான திறன்களான வலிமிகும் வலிமிகா இடங்களைச் சுலபமாக ஒருங்கிணைத்துப் கற்பிக்க இயன்றாலும், 4ஆம் ஆண்டிற்கு இடைச்சொல்லும் 5ஆம் ஆண்டிற்கு நேர்க்கூற்றும் என ஒருங்கிணைக்கும் போது கற்பிக்க கடினமாகவே உள்ளது.

பொதுவாக வேற்றுமை உருபு, வலிமிகும் வலிமிகா இடங்கள் சொற்றொடர் அடிப்படையில் கற்பிக்க இயலும், இதற்கு முழு வாக்கிய அமைப்புத் தேவையில்லை. ஆனால், இடைச் சொல், நேர்க்கூற்று அயற்கூற்று, தொடர் வாக்கியம், செய்வினை செயப்பாட்டுவினையைப் கற்பிக்க போதுமான நேரம் தேவையென ஆசிரியர்கள் கருதுகிறார்கள். இரு வகுப்புகளுக்கு ஒரே நேரத்தில் பாடம் கற்பிக்கும் போது இவ்விலக்கணத் திறன்களுக்கு முழுமையான விளக்கம் தர இயலாத சூழல் ஏற்படுகிறது. எஸ்.பி.எம் தேர்ச்சி அறிக்கை *(2017)*, மாணவர்கள் புணரியலில் பின் தங்கியுள்ளதாகவும் Manonmani Devi et.al *(2017)* பயிற்சி ஆசிரியர்களும் சரியான புணரியில் விதிகள் அறியாமல் இருக்கவே செய்கின்றனர் எனவும் கருதியுள்ளார். இதனையொட்டி ஆராயும் போது புணர்ச்சி வகையினைக் கற்பிப்பதில் ஆசிரியர்கள் ஒற்றை வகுப்புப் போதனையிலே குழப்பம் அடைந்துள்ளனர் என அறிகையில், இணைவகுப்புகளில் அதிகமான நேரம் தேவையெனும் அதற்கான விளக்கம் குறைந்த நேரத்தில் கொடுக்கலாகாது என்று கருதிடத் தோன்றுகிறது.

## பரிந்துரை

இணைவகுப்பில் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் பாடத்தினைப் கற்பிக்க போதுமான பயிற்றுத் துணைப் பொருள் இல்லை. அவர்கள் இரு வகுப்பிற்கான துணைப்பொருள்களினைச் செய்ய வேண்டுகிற சூழல் ஏற்படுகிறது. இன்னும், இணைவகுப்புகளில் திறன் மாறுப்பட்டிருப்பதால் மாணவர்களுக்கு ஆயத்தப் பயிற்சி, குறை நீக்கல் பயிற்சி என இரு வகுப்பிற்கும் தயார் செய்து கற்பிக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. ஆகவே, இணைப்பள்ளி ஆசிரியர்களுக்குக் கற்றல் கற்பித்தல் சார்ந்த பயிற்றுத் துணைப்பொருள் தயாரிப்பதில் கல்வி அமைச்சு முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

இன்றைய கல்வியுலகில் கணினி இன்றியமையாத ஒன்றாகும். தொழில்நுட்ப வழி கற்க மாணவர்கள் அதிக ஆர்வமாகவே இருக்கின்றனர் எனலாம். விஷீகூஷீணீபீவீ *(2018)* கணினி வழி ஆசிரியர்களின் பங்கினைக் குறைத்து மாணவர்கள் சுயமாகக் கற்க செய்ய இயலும் எனக் குறிப்பிட்டுள்ளார். ஆக, இணைவகுப்புப் பள்ளிகளுக்குப் போதுமான தொழில்நுட்பக் கருவிகள் அதிகரிக்க வேண்டும். அதி வேக இணைய வசதிகள் இருப்பின் மாணவர்கள் செயலிகளில் ஏற்கனவே அல்லது ஆசிரியர் தயார்படுத்தி வைத்திருக்கும் இலக்கணப் பயிற்சிகளை மேற்கொண்டு பயன் அடையலாம்.

தற்போது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில்

ஒற்றை வகுப்பில் கற்பிக்கும் அணுகுமுறைக்கான பயிற்சியே வழங்கப்படுகிறது. பயிற்சி ஆசிரியர்கள் பயிற்றுப்பணி செல்கையிலும் ஒற்றை வகுப்பிற்கே கற்பிக்கின்றனர். இவர்கள் இணைவகுப்பில் கற்பிக்கும் பயிற்சி மட்டுமின்றி அனுபவம் பெறாதவர்களாகவே இருக்கின்றனர். ஆக, கல்வி அமைச்சு பயிற்று ஆசிரியர்களை இணைவகுப்புக்குப் கற்பிக்கும் அணுகுமுறையை அறிமுகப்படுத்தி வல்லமை பெற செய்வது சிறப்பு. தற்போது இணைவகுப்புப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் பட்டறைகள் வைத்து இணைவகுப்பினைக் கையாளும் ஆற்றலை வளர்த்திட வேண்டும்.

இணைவகுப்புப் பள்ளிகளுக்கான இலக்கணக் கற்றல் கற்பித்தல் அணுகுமுறை சிப்பம் உருவாக்குதல் ஆசிரியர்களுக்குப் பெருந்துணையாக அமையும். இச்சிப்பமானது, இணைவகுப்புகளில் இலக்கணக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கை, நேரப் பகுப்பு முறை, பாடத்திட்டம் இருத்தல் சிறப்பு. இதனைவிடுத்து, ஆசிரியர்கள் இரு வகுப்பு மாணவர்களும் இணைந்து மேற்கொள்ளும் கூடி கற்றல் இணைவகுப்புகளில் திறன் மாறுபடுவதால் அமலாக்க முறையில் சிக்கல் எதிர் நோக்குகிறார்கள். ஆக, திறனுக்கு ஏற்ப கூடிக்கற்றல் முறையைச் சிப்பத்தில் விளக்கியிருப்பின் ஆசிரியர்கள் சீரான முறையில் இணைவகுப்பினை வழிநடத்துவதற்கு ஒரு வழிகாட்டியாக அமையும்.

## முடிவுரை

ஆய்வின் முடிவாக, இணை வகுப்புகளில் இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியர்கள் குறிப்பிட்ட இலக்கண விதிகளைக் கற்பிப்பதில் நேர பாகுபாட்டில் சிக்கலை எதிர்நோக்கவே செய்கின்றனர். ஒரே வகுப்பில் 4 முதல் 6 தர மாணவர்கள் இருப்பின் ஆசிரியர்கள் போதுமான நேரத்தை ஒதுக்க இயலாமல் போகின்ற சூழல் ஏற்பட்டுள்ளது. இன்னும், பாட ஒருங்கிணைப்பு ஆவணம் கல்வி அமைச்சு ஏற்படுத்திக் கொடுத்திருந்தாலும், அந்த ஆவணமானது நேர ஒதுக்கீட்டை முன் நிறுத்தவில்லை எனவும் ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேலும், தமிழ் மொழி இலக்கணக் கற்றல் கற்பித்தலில் வாக்கிய உருவாக்க அடிப்படையாகக் கொண்டு கற்பிக்கும் திறன்களைக் கற்பிப்பதில் ஆசிரியர்கள் சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர். ஆகவே, இணைவகுப்புகளில் கற்றல் கற்பித்தலானது குறிப்பிட்ட சில பாடங்களுக்கு ஏற்புடையதாக இருந்தாலும், தமிழ்மொழி இலக்கணம் கற்பித்தலில் ஆசிரியர்கள் பிரச்சனைகளை எதிர்நோக்கவே செய்கின்றனர். கல்வி அமைச்சு இணைவகுப்பில் தமிழ்மொழி இலக்கணக் கற்றல் கற்பித்தல் சார்புடைய சிக்கலைக் கவனித்தல் ஆசிரியர்களுக்கு மட்டுமின்றி மாணவர்களுக்கும் பெருந்துணையாக அமையும்.

## References


Annamala, M. D., Omar, A., & Veeralakshmi, S. (2017). Penguasaan dan persepsi guru pelatih terhadap pembelajaran tatabahasa Punarchi. *Journal of Education and Social Science*, 7(*1*), 141-146.

Bavani, A., Abdul Jalil Othman, & Mohana Dass,R. (2019). Tahap pengetahuan isi kandungan tatabahasa Tamil Punarriyal dalam kalangan guru pelatih. *EDUCATUM-Journal of Social Scinnce(EJOSS),*5(1), 54-60.

Buku Panduan Khas Kelas Bercantum. (1992). Kementerian Pelajaran Malaysia: Kuala Lumpur.

Chandru,M.(2018). Keberkesanan pembelajaran koperatif Model STAD dalam kemahiran bina ayat di kelas bercantum. *Koleksi Kajian Tindakan Guru-Guru Bahasa Tamil*, Insititut Pendidikan Guru Kampus Raja Melewar*,*1(*1*), 1-22.

Cresswell, J. W., & Creswell, D. J. (2017). *Research design: Qualitative, quantitative, and*

*mixed methods approaches* (2nd Edition). http://www.amazon.com./Research-Design-Qualitative-Quantitative-Apporaches/dp/0761924426

*Dokumen Standrad Kurikulum dan Pentaksiran KSSR Semakan Bahasa Tamil Tahun 4*. (2017). Putrajaya: Kementerian Pendidikan Malaysia.

*Dokumen Standrad Kurikulum dan Pentaksiran KSSR Semakan Bahasa Tamil Tahun 5*. (2017). Putrajaya: Kementerian Pendidikan Malaysia.

*Surat Pekeliling Ikhthisas Kementeraian Pendidikan Malaysia Bilangan 9* SKM, Tahun 2017. Kementerian Pendidikan Malaysia.

Geviana Gladysha Anak George & Nurfaradilla Mohamad Nasri. (2021). Pendekatan Pengajaran Terbeza: Pengetahuan dan Amalan Guru Kelas Bercantum di Sekolah Kurang Murid. *Jurnal Dunia Pendidikan*, 3(*2*), 484-494.

Izci, E., Duran, H., & Tasar, H. (2010). An investigation in multi grade class teaching with respect to primary school teacher candidates' perceptions and in views of primary school teachers working in multi grade classes. *Ahi Evran Universitesi Egitim Fakultesi Dergesi,* 11(*1*), 19-35.

Karthigesu, P., Maggestwary. T., & Fareed Mohammad Newastheen. (2019). Multigrading classes application and teacher's preparation in low enrolment schools in Malaysia. *International Journal of Psychosocial Rehabilitation*, 24(*6*), 1475-7192.

Kritis, L.K. (2016). Instructional Planning Practices of Rural, Multi-grade Teachers: A Case Study (Unpublishe master's thesis). Bozeman, Montana: Montana State University. Retrieved from https://scholarworks.montana.edu/

Manomani Devi, A. (2015). *Tamil Illakana Marapum Corpunarchi Vitikalum* [Unpublished doctoral dissertation]. Tamil Nadu, India: Madurai Kamaraj Universiti.

Moreno, R. & Mayer, R. E.(2007). Interactive multi model learning environments. *Educational Psychology Review*,19 , 309-326.

Msimanga, M. R. (2014). Managing Teaching and Learning in Multi-graded Classrooms in Thabo Mofutsanyana Education District, Free State (Unpublishe master's thesis). Africa: University of South Africa. Retrieved from http://uir.unisa.ac.za/

Ng Sut Fui, & Wan Muna Ruzana Wan Mohammad. (2019). Kesesuaian panduan pengajaran dan pembelajaran kelas bercantum dalam pelaksanaan pengajaran dan pembelajaran kelas bercantum di Negeri Sembilan. *Jurnal Dunia Pendidikan,* 3, 42-48.

*Panduan Pengajaran dan Pembelajaran Kelas Bercantum*. (2018). Kementerian Pendidikan Malaysia.

Phindile, N. P. Z. (2015). Management of Effective Teaching and Learning in Three Multigrade Primary Schools: Principals' Experiences (Unpublishe master's thesis). Durban, South Africa: University of Kwazulu-Natal. Retrieved from http://researchspace.ukzn.ac.za/

Rathidevi, S., Chew Fong Peng, & Mohanadass, R. (2021). Pembinaan, pelaksanaan dan kesan modul tatabahasa Bahasa Tamil berpandukan Teori Interasional, Teori Konstruktivisme

dan Strategi Dekonstruktivisme dalam kalangan pelajar Tingkatan 4. *Journal of Language Studies,* 10(*1*), 151-171. https:// doi. org/10.33736/ils.2580.2021.

Sag, R. (2009). Becoming a teacher in multigrade classes. *Electronic Journal of Social Sciences*, 8 (*28*), 20-39.

Surat Siaran Kementerian Pendidikan Malaysia Bilangan 6 Tahun 2022Pelaksanaan kelas bercantum dengan pengajaran dan pembelajaran pelbagai gred di sekolah kurang murid berenrolmen 30 orang murid ke bawah bagi tahun 2023-2025. Kementerian Pendidikan Malaysia.

UNESCO. (2015). Embracing diversity: Toolkit for creating inclusive, learning environments specialized booklet 4: Practical tips for teaching multigrade classes. France and Bangkok: UNESCO. https://www.eenet.org.uk/resources/docs/ilfe/generic/Sp4.pdf.

UNESCO. (2017). Education for sustainable development goals: Learning objectives. Paris: UNESCO. https ://www.unesc o.de/sites /defau lt/files /2018-08/unesc o_education_for_susta inabl e_devel opmen t_goals.pdf.

Yap Leng Lee (2021), Keberkesanan kaedah kelas berbalik terhadap keterlibatan pelajar dan pencapaian Bahasa Jerman [Unpublished doctoral dissertation]. Bangi, Selangor: Universiti Kebangsaan Malaysia.